# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 11557/விசாரணை/2009**

**விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009 (திருவண்ணாமலை)**

| | |
|---|---|
| **முன்னிலை** | **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**<br>**மாநில தகவல் ஆணையர்.** |
| **மனுதாரர்:** | திரு மா சுரேஷ்<br>சி 11 / 132 டாக்டர் அம்பேத்கார் நகர்<br>பெங்களூர் ரோடு<br>மக்கன், வேலூர் மாவட்டம் |
| **பொது அதிகார அமைப்பு:** | பொதுத் தகவல் அலுவலர்<br>வேலூர் புறநகர் உதவி தொடக்க கல்வி அலுவலர்<br>வேலூர் 13. |

......

மனுதாரர் மா சுரேஷ் இன்றைய விசாரணைக்கு வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக வேலூர் புறநகர் உதவி தொடக்க கல்வி அலுவலர் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தார்.**

மனுதாரர் 3.2..09 அன்று 13 இனங்களில் தகவல் கேட்டு மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பித்துள்ளார். மனுதாரரின் மனு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கு 16.2.09 அன்று தகவல் தர அனுப்பப்பட்டுள்ளது. தகவல் கிடைக்காததால் 7.3.09 அன்று மேல் முறையீடு செய்துள்ளார்.

தகவல்கள் தரப்படவில்லை என்று 4 5..09 அன்று இவ்வாணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனுவின் அடிப்படையில் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு மனுதாரா் வராததால் இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது, 2.3..09 அன்று மனுதாரருக்கு அலுவலக நேரத்தில் மனுதாரா் கோரும் தகவல்களை உதவி தொடக்கக் கல்வி அலுவலரை நேரிடையாக தொடா்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் மூலம் தெரிவித்தாக கூறினாா். மனுதாரா் நேரில் வந்தால் கோப்புகளை கேட்டு தெரிவிக்க இயலும் என்ற காரணத்தால்தான் மனுதாரரை நேரிடையாக அலுவலக நேரத்தில் வந்து அத்தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்ததாகக் கூறினாா். மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழுங்கப்படாததால் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரா் கேட்ட உரிய தகவல்களை இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணைத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்க் ஆணையிடப்படுகிறது.

மனுதாரருக்கு உரிய தகவல்களை இது வரை வழங்கப்படாதற்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலா் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 20 (1) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினை இவ்வாணயத்திற்கு இவ்வாணை கிடைத்த 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குனா், சென்னை.6 கேட்டுக்கொள்ளப்படுகிறாா்.

**மாநில தகவல் ஆணையம்**
**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

உதவிப் பதிவாளா்

தொடக்கக் கல்வி இயக்குனா்,
காலேஜ் ரோடு,
சென்னை.6

பொதுத் தகவல் அலுவா்
வேலூா் புறநகா் உதவி தொடக்க கல்வி அலுவலா் அலுவலகம்,
வேலூா் 13.

திரு மா சுரேஷ்

சி 11 / 132  டாக்டர் அம்பேத்கார் நகர்
பெங்களுர் ரோடு
மக்கன்,
 வேலூர் மாவட்டம்